# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 50 /பேரூ/2024**
**நாள் : 09.10.2025**

திரு. A. உமாமகேஸ்வரன்,
அலங்காநல்லூர்,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர், பாரதியார் 2-வது தெரு, கதவு எண். 5-5/2, என்ற முகவரியை சேர்ந்த திரு. A. உமாமகேஸ்வரன் என்பவரது 16.05.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.05.2024 அன்று பெறப்பட்டு, 50/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர், பாரதியார் 2-வது தெரு கதவு எண்.5-5/2 என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. A. உமாமகேஸ்வரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 16.05.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். மேற்படி அலங்காநல்லூர் கிராம தாவா இடத்தை எனது அப்பாவும் மற்றும் எனது பெரியம்மா திருமதி. ருக்மணி நடராஜன் அவர்களும் 1959ஆம் (3337/1959 Dt: 26.12.1959) வருடம் கிரையம் பெற்று வாங்கினார்கள். முதலில் பதிவுத் துறை சார்பதிவாளர் அலங்காநல்லூர் அலுவலகத்தில் அப்போதைய கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் பழைய UDR பட்டாவை வைத்து மேற்படி தாவா இடத்தை எதிர்தரப்பினருக்கு 1951ஆம் (504/1951 Dt: 11/03/1951) வருடம் பாகப்பிரிவினை பத்திர பதிவு ஆவணத்தையோ அல்லது எங்கள் தரப்பு கிரைய பதிவு ஆவணத்தையோ ஆராயாமல் கவனக்குறைவாக கிரையப்பதிவு செய்து கொடுத்துள்ளது. இதில் தவறு கண்டிப்பாக நடந்துள்ளது.

பின்னர் எங்கள் தரப்பில் உள்ளூர் செய்தித் தாளில் வழக்கறிஞர் மூலம் இட உரிமை சம்பந்தமாக நோட்டீஸ் பிரசுரித்து விட்டு 1995-ல் மாண்புமிகு மதுரை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து, 1997-ல் வழக்கு விசாரணைக்கு பிறகு 1997-ல் மேற்படி இடம் எங்களுக்கு சொந்தமானது என நீதிமன்ற நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பு உத்தரவு 73/95 பெற்றுள்ளோம்.

அதன்படி 2008-2009-ல் வாடிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் நீதிமன்ற உத்தரவுப்படி பட்டா மாறுதல் செய்ய மனு செய்து, 2009-ல் பட்டா மாறுதலும் RTR 667ன்படி செய்து 2344 பட்டாவையும் பெற்றுள்ளோம்.

மேலும் எனது அப்பா கடந்த 2011ஆம் ஆண்டு இறந்துவிட்டார். எனது பெரியம்மாள் திருமதி ருக்மணி நடராஜன் அவர்களும் 90 வயது மிக மூத்த குடிமகளாவார்.

மேற்படி நில சம்பந்தமாக எனது அப்பா வாடிப்பட்டி தாலுகா உரிமையியல் நீதிமன்றத்தில் E.P. பெட்டிஷன் 74/2010 தாக்கல் செய்திருந்தார். அதனை நான் மாற்றி மாண்பமை மதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மூன்றாம் சார்பு நிலை நீதிமன்றத்தில் ரெகவரி ஆப் பொசஸன் வழக்கு 343/2014 தாக்கல் செய்துள்ளேன்.

இந்நிலையில் மேற்படி தாவா சம்பந்தமாக எங்களுக்கு உரிமையுள்ள மேற்படி நிலத்தில் நல்லசின்னான் மகன் பெருமாள் என்பவர் ஏற்கனவே நீதிமன்ற உத்தரவையும் மீறி ஒரு வீடு கட்டியிருந்த நிலையில் அதே இடத்தில் இரண்டாவதாக ஒரு வீடு கட்ட முயற்சிப்பதாகவும் அதற்கு வீடு வரைபட அனுமதி பேரூராட்சியில் வாங்க முயற்சிப்பதை அறிந்து, நான் கடந்த 07.06.2013ஆம் தேதியிட்ட புகார் மனுவை அலங்காநல்லூர் பேரூராட்சி அலுவலகத்திற்கு அனுப்பினேன். உண்மையில் N. பெருமாள் நீதிமன்ற ஆணைப்படி தாவா இடம் அல்லது தாவா நிலத்தில் எந்த ஒரு மாற்றமும் செய்ய தகுதியை இழந்துவிட்டார். அவர் நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலும் status quoஆக நிலம் இடம் இருக்க வேண்டும் என்பதே சட்ட விதிமுறை.

அதில் தெளிவாக மேற்படி பெருமாள் 73/95 வழக்கின் தீர்ப்பை மறைத்து, பட்டா மாறிய BONAFIDE உண்மை விவரங்களை மறைத்து வரைபட அனுமதி வாங்க முயற்சிப்பதை தெரிவித்து புகார் செய்து இருந்தேன்.

ஆனால் அலங்காநல்லூர் பேரூராட்சி சம்பந்தப்பட்ட அலுவலர், செயல் அலுவலர் என்னை எதுவும் விசாரணை செய்யாமலேயே வீட்டு வரைபட அனுமதி முறைகேடாக வழங்கியிருந்தனர். இந்நிலையில் நான் சமர்ப்பித்த ஆவணங்களை வேண்டுமென்றே ஆராயாமலும், என்னை விசாரணை செய்யாமலும் சட்டத்திற்கு புறம்பாகவும் நீதிமன்றத்தை அவமதிப்பது போலவும் நடந்து கொண்டு வீட்டு வரைபட அனுமதியை பொருள் ஆதாயம் வேண்டி இந்த அநீதியை செய்துள்ளனர். நான் மீண்டும் 25.02.2014ஆம் தேதியிட்ட மேற்படி வீட்டு வரைபட அனுமதியை ரத்து செய்யவும், வீட்டு வரி வசூல் செய்ய ஆட்சேபனை செய்தும் புகார் மனுவை அலங்காநல்லூர் பேரூராட்சி அலுவலகத்திற்கு அனுப்பியிருந்தேன்.

மேற்படி புகார் மனுவுக்கு அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் பதில் தெரிவிக்காத காரணத்தினால் நான் அது சம்பந்தமாக 08.08.2014 அன்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி தகவல் கேட்டு மனு செய்தேன்.

அதில் மீண்டும் சட்டத்திற்கு புறம்பாக அல்லது சட்டத்தின் விதிகளை பற்றி தெரியாமல் அலங்காநல்லூர் செயல் அலுவலர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தவறான விபரங்களை தெரிவித்திருந்தார். அதாவது, மேற்படி நல்லசின்னான் மகன் பெருமாள், நாங்கள் பெற்றுள்ள நில

உரிமை நீதிமன்ற உத்தரவு மற்றும் நீதிமன்ற நிரந்தர உறுத்துக்கட்டளையை மீறி அதுவும் மேற்படி பெருமாள் தவறாக தாக்கல் செய்துள்ள மேல் நீதிமன்ற மேல்முறையீடு அல்லாத கீழமை நீதிமன்ற செயலில் இல்லாத (சுட்டிக்காட்டியும்) தற்காலிக தடையாணையை காரணம் காட்டி, அரசு வழக்கறிஞரின் (சட்ட, நீதி விதிமுறைகள் தெரியாத அல்லது மீறிய) கருத்துரை பெறப்பட்டதாகவும், அதன்படி நாங்கள் நீதிமன்றத்தை அணுகி தீர்வு ஏற்படுத்திக்கொள்ளவும் என்று ஒரு சட்டத்திற்கு புறம்பான / முரணான பதிலை தெரிவித்திருந்தனர்.

நில உரிமை சம்பந்தமாக நாங்கள் நிரந்தர உறுத்துக்கட்டளையும், நிலம் திரு. கே. அழகர்சாமி, எனது அப்பா மற்றும் திருமதி என். ருக்மணி அவர்களுக்கும் உடையது என்ற தீர்ப்பையும் பெறப்பட்டுள்ளது. அதே சமயம் மேற்படி பெருமாள், சட்டத்திற்கு புறம்பாகவும், நீதிமன்ற உத்தரவிற்கு எதிராகவும், கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கினை காரணம் காட்டி வீடு வரைபட அனுமதி வழங்கியது முறைகேடானது. மேற்படி 73/95, தீர்ப்பில் வழக்கிடை சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது எனவும் மேற்படி பெருமாள் உள்பட அனைத்து பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, முகவர்களோ அல்லது வேலையாட்களோ எக்காரணம் கொண்டும் வழக்கிடை சொத்தின் நிலையான அமைப்புகளை மாற்ற கூடாது எனவும் வாதிகளான எங்களின் சுவாதீனத்தை இடையூறு செய்ய கூடாது எனவும் உத்தரவு / நிரந்தர உறுத்து கட்டளை பிறப்பித்து உள்ளது மாண்பமை நீதிமன்றம்.

இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்கு சம்பந்தப்பட்ட சொத்தில் எந்தவொரு மாறுதலும் ஏற்படுத்தக்கூடாது (STATUS QUO) என்பது சட்டம் ஆகும். அச்சமயத்தில் 343/2014 ரெகவரி ஆப் பொசஸன் வழக்கு பற்றியும் மேற்படி எதிர்வாதிகளுக்கும் தெரியும்.

இந்நிலையில் மேற்படி 343/2014 வழக்கு சம்பந்தமாக விவரம் தேவைப்படுவதால், நான் 14.04.2023 அன்று பெருமாள், முருகதாசன், பஞ்சவர்ணம் மற்றும் ரோஜம்மாள் ஆகியோர் முறைகேடாக மேற்படி எங்களது நிலத்தில் வீட்டு வரி ஏற்படுத்தி செலுத்தி வருகின்றனர். மேற்படி நபர்களுக்கு பட்டாவும் தாவா நிலத்தில் கிடையாது. சட்டப்படி உரிமையும் நீதிமன்றத்தின் 73/95 உத்தரவின்படி உரிமையும் கிடையாது. அந்த வீட்டு வரி வசூல் மற்றும் வீட்டுவரி பெயர் மாற்றம் ஆகியவற்றை ஆட்பேசித்து மனு செய்திருந்தேன். அதற்கு அலங்காநல்லூர் பேரூராட்சி தரப்பில் இருந்து பதில் இல்லாததால், தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி 15.04.2023 அன்று மேற்படி பெருமாள் வீட்டு வரைபட அனுமதி பிரச்சனையில் பெறப்பட்ட அரசு வழக்கறிஞர் கருத்துரை நகலையும், அதற்கு அடிப்படையாக வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட ஆவணங்களின் நகல்களையும் எனக்கு அனுப்பி வைக்க மனு அனுப்பியிருந்தேன். மேலும் பஞ்சவர்ணம் மற்றும் முருகதாசன் ஆகியோருக்கு வீட்டு வரி ஏற்படுத்துவதற்கு பெறப்பட்ட ஆவணங்கள் நகல்களையும் கேட்டு ஒரு தகவல் அறியும் உரிமை சட்ட மனு 19.04.2023 அன்று அனுப்பியிருந்தேன்.

மேற்படி இரண்டு தகவல் அறியும் உரிமை சட்ட மனுக்களுக்கும் அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரின் பதில் சரியான அல்லது முறையானதாக இல்லை, தவறான மற்றும் சட்டத்திற்கு புறம்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலில் வழக்கறிஞர் கருத்துரையின்படி வீட்டு வரைபட அனுமதி வழங்கியதாக அப்போதைய அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருந்த நிலையில் தற்போது அதுபோல வழக்கறிஞர் கருத்துரை ஆவணங்களாக இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந.க. எண். 81/அ1/2023 /நாள் 10.05.2023). மேலும் எங்களது நிலத்தில் மேற்படி பஞ்சவர்ணம், முருகதாசன் மற்றும் ரோஜம்மாள் குடியிருந்து வரும் நிலையில் அவர்களை மூன்றாம் நபர்கள் என்று குறிப்பிட்டு ந.க. எண். 91/அ1/2023 நாள் 10.05.2023-ல் தகவல்களை அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் தர மறுத்துள்ளார். இதிலிருந்து

அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஒன்று சட்டப்படி விசாரணையே செய்யவில்லை அல்லது வேறு ஆதாயத்திற்காக தகவல்களை தர மறுக்கிறார் என தெரிகிறது.

எனவே மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் எனது நியாயமான சட்டப்படியான கோரிக்கையை உரிய முறையில் விசாரணை செய்து மேற்படி செயல் அலுவலர்கள் (1. முறைகேடாக வீடு வரைபட அனுமதி வழங்கியவர் மற்றும் முதலில் தவறான தகவல் தந்தவர் என்ற வகையிலும் 2. இரண்டாவது முறையாக தவறான தகவல்கள் மற்றும் தகவல் தர மறுத்தவர் என்ற வகையில் இரண்டாவது செயல் அலுவலர் என்ற வகையிலும்) மீது சட்டப்படி உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மேற்படி சட்டத்திற்கு புறம்பான வீட்டு வரைபட அனுமதி, முறைகேடான வீட்டுவரி எண்கள் ஆகியனவற்றை ரத்து செய்து உரிய உத்தரவினை பிறப்பிக்கவும் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.06.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 17.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 162/2025/அ2-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"அலங்காநல்லூர் பேரூராட்சி சார்பில் கட்டட உரிமம் எண். 32/2013-2014 நாள் 03.10.2013ன்படி திரு. N. பெருமாள் த/பெ நல்லசினையன் என்பவருக்கு குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அலங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 2145/1991 நாள் 27.12.1991ன்படி முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தைக் கொண்டு கட்டட உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அலங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கண்ட வில்லங்கச் சான்றிதழ் நகல் பெறப்பட்டுள்ளது. மேலும் வருவாய்த்துறை ஆவணங்களின்படி பட்டாவானது நாளது தேதி வரை திரு. N. பெருமாள் என்பவரின் பெயரில் உள்ளது. முறையாக ஆவணங்களை ஆய்வு செய்த பின்னர் அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் கட்டட உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு. அ. உமாமகேஸ்வரன் என்பவர் கட்டட உரிமம் வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவித்து பேரூராட்சி அலுவலகத்தில் விண்ணப்பம் செய்ததாகவும் அதனை மீறி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் கட்டட உரிமம் வழங்கியதாகவும் புகார் தெரிவித்துள்ளார். நாளது தேதியில் கோப்புகளை ஆய்வு செய்ததில் திரு. அ. உமாமகேஸ்வரன் என்பவர் ஆட்சேபனை தெரிவித்ததாக கூறப்படும் தபால் மனு பேரூராட்சி அலுவலக கோப்பில் இல்லை.

மனுதாரர் திரு. அ. உமாமகேஸ்வரன் என்பவரிடமிருந்து வரப்பெற்ற 19.04.2024 நாளிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் 10.05.2023 நாளிட்ட கடிதம் ந.க.எண். 91/அ1/2023-ல் உரிய பதிலறிக்கை தரப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்களால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் செய்யப்பட்ட தனது முறையீட்டு மனுவில் திரு. N. பெருமாள் அவர்களுக்கு கட்டட வரைபட அனுமதி முறைகேடாக வழங்கப்பட்டதாக புகார் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து, அரசு வழக்கறிஞர், மாவட்ட நீதிமன்றம், மதுரை அவர்களுக்கு சட்டக்

கருத்துரு கோரி பேரூராட்சி அலுவலக ந.க. எண். 139/2024 நாள் 21.06.2024ன்படி மனு செய்யப்பட்டது. அரசு வழக்கறிஞர் மாவட்ட நீதிமன்றம் மதுரை அவர்களின் கருத்துரு நகல் நாள் 26.06.2024-ல் without any order from the court law, you unable to proceed to cancel the plan approval already given to said Perumal என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். W.P.(MD) No.16264/2024ன்படி திரு. அ. உமாகேஸ்வரன் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு தற்போது வழக்கு நடைபெற்று வருவதால் வழக்கின் முடிவை பொறுத்து இறுதி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் இதன்மூலம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு மற்றும் எதிர்மனுதாரரான அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை ஆகியவை உரிய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. அ. உமாகேஸ்வரன் என்பவர் தனது 16.05.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வடக்கு தெரு, புல எண். 69/11D-ல் திரு. ந. பெருமாள் என்பவர் கட்டடம் கட்ட முறைகேடாக அலங்காநல்லூர் பேரூராட்சியால் அனுமதியும் மற்றும் அவரது பெயரில் சொத்து வரியும் விதிக்கப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்து, மேற்படி கட்டட வரைபட அனுமதியும் மற்றும் திரு. ந. பெருமாள் என்கிற பெயரில் உள்ள சொத்துவரியையும் இரத்து செய்ய ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் அலங்காநல்லூர் கிராம தாவா இடத்தை தனது அப்பாவும் மற்றும் தனது பெரியம்மா திருமதி. ருக்மணி நடராஜன் அவர்களும் 1959ம் (3337/1959 Dt: 26.12.1959) வருடம் கிரையம் பெற்று வாங்கினார்கள் எனவும் பதிவுத் துறை சார்பதிவாளர் அலங்காநல்லூர் அலுவலகத்தில் அப்போதைய கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் பழைய UDR பட்டாவை வைத்து மேற்படி தாவா இடத்தை எதிர் தரப்பினருக்கு 1951ம் (504/1951 Dt: 11.03.1951) வருடம் பாகப்பிரிவினை பத்திர பதிவு ஆவணத்தை ஆராயாமல் கவனக்குறைவாக கிரையப்பதிவு செய்து கொடுத்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் புல எண். 69/11 D-ல் 5 சென்ட் பரப்பளவு கொண்ட காலி இடத்தினை பழைய UDR பட்டாவை அடிப்படையாகக் கொண்டு, பெ. பெரியகெங்கை என்பவரிடமிருந்து திரு. ந. பெருமாள் என்பவருக்கு 27.12.1991-ல் கிரையம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது".

இதனை எதிர்த்து மனுதாரரின் தந்தை திரு. அழகர்சாமி மற்றும் மனுதாரரின் பெரியம்மா திருமதி. ருக்மணி நடராஜன் ஆகியோரால் மாண்பமை மதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு (முதலேற்பு வழக்கு எண். 73/95) தொடரப்பட்டு, அவ்வழக்கில் 28.02.1997 நாளிட்ட தீர்ப்புரையில் வழக்கிடைச் சொத்து வாதிகளான அழகர்சாமி மற்றும் ருக்மணி நடராஜன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றும், வழக்கிடை சொத்தினை உட்பிரிவு செய்து மேற்படி வாதிகளின் பெயரில் பதிவேட்டில் பதியப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டது. மேலும் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எக்காரணம் கொண்டு வழக்கிடைச் சொத்தினை நிலையான அமைப்புகளை மாற்றக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை தீர்ப்புரையில் வழங்கப்பட்டது. மேற்காணும் நீதிமன்ற ஆணையின்படி 2009ஆம் ஆண்டில் பட்டா மாறுதல் செய்யப்பட்டது. (பட்டா எண். 2344)

இதற்கிடையில் மேற்படி மனுதாரரின் சொத்தானது காலி இடமாக இருந்ததால் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட புல எண். 69/11D1, 69/11D2, 69/11 D3-ல் கட்டப்பட்ட இடத்தினை, வழக்கு O.S. No.73/95-ல் உள்ள பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததால், அவற்றை அகற்றிடக்கோரி மனுதாரர் திரு. அ. உமாகேஸ்வரன் என்பவரால் மாண்பமை மதுரை மாவட்ட உரிமையியல் மூன்றாம் சார்புநிலை நீதிமன்றத்தில் வழக்கு (எண். O.S. No. 343/2014) தொடரப்பட்டு, அவ்வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் புல எண். 69/11 D–ல் கட்டடம் கட்ட திரு. பெருமாள் என்பவர் சமர்ப்பித்த பதிவு செய்யப்பட்ட 27.12.1991 நாளிட்ட கிரையப் பத்திரம் அடிப்படையாகக் கொண்டு அம்மனையில் கட்டடம் கட்ட திரு. பெருமாள் என்பவருக்கு அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரால் கட்டட உரிமை எண். 32/2013-2014 நாள் 03.10.2013-ல் கட்டட அனுமதி வழங்கப்பட்டது.

இச்சூழ்நிலையில், மதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் வழக்கு எண். 73/95-ல் வழங்கப்பட்ட 28.02.1997 நாளிட்ட தீர்ப்புரைக்கு எதிராக அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரால் திரு. N. பெருமாள் என்பவருக்கு புல எண். 69/11 D-ல் கட்டட அனுமதி விதிமீறி முறைகேடாக வழங்கப்பட்டதை எதிர்த்து பேரூராட்சி செயல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி மனுதாரர் திரு. அ. உமாகேஸ்வரன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு (எண். W.P.(MD) No. 16264 of 2024) தொடரப்பட்டது.

மேற்காணும் W.P.(MD) No. 16264/2024 வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு தனது 11.07.2025 நாளிட்ட தீர்ப்புரையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

" xxx xxx xxx

5. It is not clear under what circumstances building permission was granted to the said N. Perumal. Further, N. Perumal has not been made a party to the present proceedings. It is quite possible that the decree obtained by the petitioner's parent in O.S. No. 73 of 1995, from the District Munsif Court at Madurai on 28.02.1997, was suppressed. Unless there are clear indications that the permission granted to the said N. Perumal on 03.10.2013 was issued with knowledge of, and in defiance of the aforesaid judgment and decree passed in O.S. No. 73 of 1995 dated 28.02.1997, the request of the petitioner for initiating proceedings against the third respondent under Rule 20 of Tamil Nadu Government Servant Conduct Rules, 1973 cannot be countenanced.

6. In these circumstances, this Writ Petition is liable to the dismissed. However, liberty is given to the respondent Nos.1 (The Director of Town Panchayat, Chennai and 2 (The Executive Officer, Alanganallur Town Panchayat, Madurai) to call for the records and to re-examine the issue afresh and to examine whether indeed the third respondent (A. Kalaiyarasi, Executive Officer, Irugur, Coimbatore District) has given the planning permission to the said Perumal even though with the knowledge of the judgement and decree in O.S. No.73 of 1995, dated 28.02.1997. (02.02.1997)

7. Before passing any order, an enquiry shall be conducted by summoning the petitioner and the said Perumal, who was the 11th defendant in the above said suit, within a period of eight weeks from the date of receipt of copy of this order".

மேற்காணும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கு எண். W.P.(MD) No.16264/2024–ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழங்கியுள்ள 11.07.2025 நாளிட்ட ஆணையினை நிறைவேற்றும் வகையில் திரு. N. பெருமாள் என்பவருக்கு புல எண். 69/11 D-ல் அலங்காநல்லூர் பேரூராட்சியில் கட்டட அனுமதி வழங்கப்பட்டது குறித்து திரு. பெருமாள் என்பவரையும் விசாரணை மேற்கொண்டு, இந்நேர்வினை புதிதாக மறுபரிசீலனை செய்து உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை மற்றும் அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர், மதுரை ஆகியோரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு அக்டோபர் 09-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. அ. உமாகேஸ்வரன்,
கதவு எண். 5-5/2. பாரதியார் 2-வது தெரு,
வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர்,
மதுரை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்